மங்கையர், ஆடவர்
மனதைக் கொள்ளை
கொள்ளும்
வண்ண வண்ணப்பட்டு,
பருத்தி புடைவைக் கடல்
திருமாட்டி
புடைவைக் கடல்
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

பக்கங்கள் நான்கு
Registered as a Newspaper

உதயன்

விலை
ரூபா
5-00

கலயாண முகூர்த்தப்
புடைவைகளின்
ராசியான முன்னணி
நிறுவனம்
திருமாட்டி
புடைவைக் கடல்
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆடி 17 செவ்வாய்க்கிழமை (02 – 08 – 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 247

தமிழர், முஸ்லிம்களுக்கு உள்ள வாக்குரிமையை யுத்தத்தில் வெற்றிபெறும் வரை தடை செய்யுங்கள்!

தமிழீழ நிர்வாக சேவை வவுனியாவிலும் ஆரம்பம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் தமிழீழ நிர்வாக சேவை வவுனியாவில் கடந்த சனியன்று சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தமிழீழ அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன் தேசியக் கொடியை ஏற்றி நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தார்.

விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள், அரச அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் உட்பட பலர் அந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

நிர்வாக சேவைப் பணியகத்தின் பெயர்ப் பலகையை வன்னிமாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. ஞானம் திரைநீக்கம் செய்தார்.

தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் திரு. டொமினிக் நாடாவை வெட்டி பணிமனையை திறந்துவைத்தார்.

பின்னர் அங்கு இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்களும், அரச மற்றும் சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகளும் உரையாற்றினர்.

தொடர்ந்து நிர்வாக சேவைப் பணியகத்தின் பணியாளர்கள் சத்தியப்பிரமாணம் செய்யும் வைபவம் இடம்பெற்றது.

விடுதலைப் புலிகளின் நிர்வாக சேவை கடந்த மாதம் 19 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது தெரிந்ததே. (உ-ஐ)

பருத்தித்துறைக்கு 'நரோமா' நேற்று வந்து திரும்பியது

யாழ்ப்பாணம், ஓக. 2

நேற்று காங்கேசன்துறைக்கு வந்து சேர்ந்த "நரோமா" கப்பல் கடற்படையினரின் சோதனையின்றி நேரடியாகப் பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்தது.

கொழும்பில் தங்கியுள்ள அரச அதிபர் அங்கு பாதுகாப்பு அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுக்களையடுத்து — இங்கிருந்து செல்லும் பயணிகளை காங்கேசன்துறையிலும் — அங்கிருந்து வரும் பயணிகளை திருகோணமலையில் மட்டுமே சோதனையிட இணக்கம் காணப்பட்டதாக அறியவந்தது.

இதற்கிணங்க திருகோணமலையிலிருந்து நேற்று நரோமா கப்பலில் வந்த பயணிகளை காங்கேசன்துறையில் வைத்து படையினர் சோதனையிடவில்லை.

நேற்றுக் காலை பருத்தித்துறைக்கு வந்த 'நரோமா' நண்பகல் இங்கிருந்து செல்லும் பயணிகளுடன் திருகோணமலைக்கு திரும்பியது.

முல்லை. மீனவர் படகு மீது கடற்படையினர் தாக்குதல்

மீனவர் ஒருவரைக் காணவில்லை

யாழ்ப்பாணம், ஓக 2

முல்லை மாவட்டம் புதுக்குடியிருப்பு கடற்பகுதியில் நேற்று முன்தினம் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர் மீது கடற்படையினர் தாக்குதல் நடத்தினர்.

காலை 9 மணியளவில் மீனவரின் படகு ஒன்றை நோக்கி வந்த கடற்படையினர் அதன் மீது தாக்குதல் நடத்தினர். இதனால் படகில் இருந்த மீனவர் இருவர் கடலில் பாய்ந்தனர். பின்னர் படகைக் கைப்பற்றிய படையினர் அதனைத் தீயிட்டுக் கொளுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடலில் குதித்த மீனவர்களில் ஒருவர் நீண்ட நேரத்தின் பின் நீந்திக் கரை சேர்ந்தார். மற்றைய மீனவரான மணற்குடியிருப்பைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தை செபஸ்தியாம்பிள்ளை அருந்தவராஜா என்பவர் காணமற்போயுள்ளார். (உ-ஐ)

அடுத்த இரண்டு ஆண்டுகளில்

தமிழகத்தில் வீடு தோறும் ஓர் எய்ட்ஸ் நோயாளி!

சென்னை, ஆக. 1

அடுத்த இரண்டு ஆண்டுகளில் தமிழ் நாட்டில் வீடு தோறும் ஓர் எய்ட்ஸ் நோயாளி இருக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

பெரும்பாலும் கிராமப் புறங்களிலேயே தீவிரமாக இந்நோய் பரவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை தமிழகத்தில் எய்ட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 3½ லட்சமாக அதிகரித்துள்ளது என்று மதிப்பிடப்பட்டுள்ளது. (ஏ-க)

கடலில் "மாண்டவர்" மீண்டபோது மரணவீடு!

தென்மராட்சி, ஓக. 2

கடற்படையினரின் தாக்குதலுக்கு இரையாகி கடலில் உயிர் நீத்துவிட்டார் எனக் கருதப்பட்ட ஒருவர் — தமது வீட்டில் மரணவீடு கொண்டாடப்பட்டுக் கொண்டிருந்த வேளை அங்கு சென்று — தமது குடும்பத்தவருக்கு மகிழ்ச்சியையும், ஏனையோருக்கு அதிர்ச்சியையும் கொடுத்தார்!

அது மட்டுமன்றி "உயிர் மீண்ட" கண்டர் எனப்படும் சம்பந்தப்பட்டவரும், தாம் இறந்ததாகக் கருதிய மருமகன் வீட்டில் உயிருடன் இருப்பது கண்டு ஆச்சரியமடைந்தார்.

மருதங்கேணியில் நடைபெற்ற இச்சம்பவம் குறித்துத் தெரியவருவதாவது:-

கடந்த சனிக்கிழமை காலை மீன்பிடிப் படகில் சென்ற நால்வர் மீது அவ்வழியே வந்த பீரங்கிப் படகு தாக்குதல் நடத்தியது.

இதனால் இப்படகிலிருந்த நால்வரும் கடலில் பாய்ந்து நீந்தினர். இவர்களில் மூவர் கரை சேர்ந்தனர். நாலாமவர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

சிங்கள இனவாத குழு சார்பில் தொலைக்காட்சியில் உரை

கொழும்பு, ஒகஸ்ட் 2

தற்போது நடைபெற்று வரும் வடக்கு – கிழக்கு யுத்தத்தில் சிங்களவர்கள் வெற்றியீட்டும் வரை தமிழர் மற்றும் முஸ்லிம்களின் வாக்குரிமை நிறுத்தப்பட வேண்டும்.

அவ்வாறு செய்யாவிடில் தமிழ் பேசும் மக்கள் சிங்களவரை வாக்குகளினாலும் ஆயுதங்களினாலும் தாக்குவர்.

"சிங்கள பூமிபுத்ர" என்ற இனவாதக் கட்சியின் பேச்சாளர் நேற்று தொலைக்காட்சியில் நடத்திய தேர்தல் உரையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவரது தேர்தல் பேச்சு முற்றாக இனத்துவேஷம் நிறைந்ததாகவும், சிங்கள வாதம் மிகுந்தும் இருந்தது. 15 நிமிட நேரமாக அவர் அரச தொலைக்காட்சியில் இனவாதத்தைக் கக்கினார். அவரது தேர்தல் உரையின் சில பகுதிகள் வருமாறு:- "சிங்கள பூமிபுத்ர" கட்சியின் ஆட்சியில் அனைத்துத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

பொ.ஐ.மு. உறுப்பினர்கள் 11 பேர் இதுவரை கொலை!

ஐ.தே.கவின் சண்டித்தனத்தை உடன் தடுத்து நிறுத்துங்கள்!

டி.பிக்கு சிறிமாவோ காரசாரக் கடிதம்

கொழும்பு, ஓக. 2

ஆளும் ஐ.தே.க. ஆதரவாளர்கள் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஆதரவாளர்கள் மீது நடத்திவரும் வன்முறைத் தாக்குதல்கள் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் சிறிமாவோ பண்டாரநாயக்கா ஜனாதிபதி விஜேதுங்காவுக்கு நேற்று காரசாரமான கண்டனக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்தார்.

ஐ.தே.க. ஆதரவாளர்கள் நடத்திவரும் தாக்குதல்களில் இதுவரை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆதரவாளர்கள் பதினொருபேர் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் அவர் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

"விஜேதுங்கா ஐக்கியதேசியக் கட்சியின் தலைவர் என்றாலும், அவர் இந்த நாட்டின் ஜனாதிபதியே இது விஜேதுங்காவின் நினைவுக்கு வரவில்லையோ?" என்றும் அவர் தமது கடிதத்தில் கேட்டுள்ளார்.

அனுராதபுரத்தில் பொ.ஐ.மு. ஆதரவாளரான பியசேன கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் இருந்து அமைச்சர் அதிகாரியைத் தப்புவிப்பதற்கு தேவையான தந்திரோபாயங்களை அமைச்சர் சொக்ஸி உள்ளிட்ட ஐ.தே.க. சட்டத்தரணிகள் குழு ஒன்று வகுத்ததாகவும் அவர் தமது கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்.

வென்னப்புவையில் முன்

[4 ஆம் பக்கம் பார்க்க]

மூன்று நாட்களின் பின்னர்

நீதிமன்றத்தில் சரணடைந்த அமைச்சருக்கு பிணை அனுமதி

மேலும் சாட்சியங்கள் கிடைத்தால் விளக்க மறியல்

கொழும்பு, ஓக. 2

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆதரவாளர் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக தபால், தொலைத்தொடர்பு அமைச்சர் ஏ. எம். எஸ் அதிகாரி நேற்றுக்காலை அனுராதபுரம் நீதிமன்றத்தில் சரணடைந்தார்.

அனுராதபுரம், மங்குளுவெவ கிராமத்தைச் சேர்ந்த ஆர். எம். பியசேன கொலை செய்யப்பட்டமை தொடர்பாக அமைச்சர் அதிகாரியைக் கைது செய்யும்படி அனுராதபுரம் நீதிவான் பொலீஸாருக்கு உத்தரவிட்டிருந்தது தெரிந்ததே.

மூன்று தினங்களாகப் பொலீஸாரால் கைது செய்யப்படாமல் இருந்த அமைச்சர் நேற்றுக்காலை நீதிமன்றத்தில் சரணடைந்தார். அதன் பின்னர் இச்சம்பவம் தொடர்பான சாட்சியங்கள் நெறிப்படுத்தப்பட்டன.

அதனைத் தொடர்ந்து அமைச்சர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி தயா பெரேரா, "காலஞ்சென்றவர் மீது நடத்தப்பட்ட முதலாவது தாக்குதலின்போது அமைச்சர் அதிகாரியும் அதில் சம்பந்தப்பட்டிருந்தார் என்று கூறும் சாட்சி

[4 ஆம் பக்கம் பார்க்க]

ஈழத்தமிழர் சுகாதார பாதிப்பு: லண்டனில் விரைவில் மாநாடு

லண்டன், ஓக.2

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழ் மக்களின் சுகாதார நிலைமை பற்றியும் சுகாதாரத் தேவைகள் பற்றியும் ஆராய்வதற்கான சர்வதேசிய மாநாடு ஒன்று இவ்வாண்டு செப்டம்பர் மாதம் 17 ஆம் 18 ஆம் திகதிகளில் றோயல் லண்டன் ஆஸ்பத்திரியில் நடைபெறவுள்ளது.

தமிழ் மருத்துவ நிறுவனம், தமிழர் தகவல் நிலையம், ஆசியா அமெரிக்க கலிபோர்னியா தமிழ் அகதிகள் நிவாரண ஸ்தாபனத்துடன் இணைந்து இந்த மாநாட்டை ஒழுங்குபடுத்துகின்றன.

மாநாட்டில் பல்வேறு அரசாங்கங்களின் பிரதிநிதிகளும் அரசாங்க சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும், உதவி [illegible] ஆகியவற்றின் பிரதிநிதிகளும் அறிஞர்களும் பங்குபற்றுவார்கள் என அறிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் இருந்து யாழ். அரசாங்க அதிபர் திரு கா. மாணிக்கவாசகர், முன்னாள் வடபிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி பொ. இரத்

(4ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முனி

அம்மையாருக்கு இப்பவே [illegible] உஷார் பிறந்திருக்கு [illegible]

கிளாலி – பூநகரி படகுச் சேவை

யாழ்ப்பாணம், ஓக. 2

கிளாலி — பூநகரி படகுச் சேவை இன்று செவ்வாய்க்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (உ-ஐ)

தரை, கடல் மார்க்கமாக வட – கிழக்கில் நடவடிக்கை

பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஓக. 2

வடக்கு கிழக்கு பகுதிகளில் படையினர் விடுதலைப் புலிகளுக்கு எதிராக தரைமார்க்கமாகவும், கடல்மார்க்கமாகவும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளதாக இலங்கை வானொலி தெரிவித்தது.

வடமராட்சி கிழக்கு, முல்லைத்தீவு ஆகிய இடங்களில் கடற்படையினர் தாக்குதல்கள் நடத்தியதாகவும் — பூநகரியிலும், திருகோணமலையிலும் தரைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் மேலும் அறிவிக்கப்பட்டது. [ஐ]

காரைநகர் பகுதியிலிருந்து தொடர்ந்து ஷெல் தாக்கு!

காரைநகர் முகாமிலிருந்து நேற்று அதிகாலையும் நேற்று முன்தினம் இரவும் பொன்னாலை, மூளாய் பகுதிகளை நோக்கிப் படையினர் கடும் ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

கடந்த சில நாட்களாக இது போன்று தொடர்ச்சியாக நடத்தப்பட்டுவரும் தாக்குதல்களால் இரவு வேளைகளில் இப்பகுதிகளில் பதற்றம் நிலவுகிறது.

படையினர் திடீர் திடீரென ஷெல் தாக்குதல்களையும், துப்பாக்கிச் சூட்டையும் நடத்துவதால் கரையோர மீன்பிடித் தொழிலும் இப்பகுதிகளில் பாதிக்கப்பட்டுள்ளது. (ஐ-15)

வடமராட்சி கடற் பகுதியில் நேற்று பீரங்கித் தாக்குதல்

வல்வெட்டித்துறை, ஓக. 2

வடமராட்சி கடற்பகுதியில் இருந்து கடற்படையினர் நேற்று காலை 6-30மணிமுதல் கரையோரப் பகுதிகளை நோக்கிக் கடும் பீரங்கித் தாக்குதல்களை நடத்தினர். இதனால் பொலிகண்டி, வல்வெட்டித்துறை — ஆதிகோவிலடி மயிலியதனை, காட்டுப்புலம் கடற் பகுதியில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் கரை திரும்பினர்.

படையினர் ஏவிய பீரங்கிக் குண்டு ஒன்று தொண்டமனாறு அரசடி பகுதியில் வீடு ஒன்றின் மீது விழுந்து வெடித்தது. இதனால் வீட்டின் ஒரு பகுதி சேதமடைந்தது.

கடற்கரையோரப் பகுதிகளில் நிறுத்தப்பட்டிருந்த மீன்பிடி வள்ளங்கள் சிலவும் சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (உ–ஐ-155-173)

உதைபந்தாட்டத்தின் போது காயமுற்ற மாணவன் மரணம்

யாழ்ப்பாணம், ஓ. 2

உதைபந்தாட்டப் பயிற்சியில் ஈடுபட்டிருந்தவேளை ஏற்பட்ட விபத்தில் படுகாயமடைந்து காலொன்றை இழந்த பாடசாலை மாணவர் ஒருவர் பின்னர் மரணமானார்.

பூநகரி செல்லையாதீவு அ.த.க. பாடசாலையில் கல்வி பயிலும் குருநாதபிள்ளை உதயராஜ் என்ற மாணவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

உதைபந்தாட்ட போட்டி ஒன்றுக்கான பயிற்சியில் ஈடுபட்டிருந்த சமயம் பலமாக விழுந்ததால் காலில் பலத்த காயங்களுக்கு உள்ளான இவர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவரது காலை அகற்ற வேண்டி ஏற்பட்டது. ஆயினும் சில நாட்களின் பின்னர் அவர் மரணமானார்.

காங்கேசன்துறையைச் சேர்ந்த பிரஸ்தாப மாணவர் அங்கிருந்து இடம்பெயர்ந்து குடும்பத்தவருடன் பூநகரியில் உள்ள [illegible] என்னுமிடத்தில் வசித்து வந்தார்.

'ருகுணு' வருவதில் தாமதம்

"ருகுணு" கப்பல் நேற்று கொழும்பிலிருந்து பருத்தித்துறைக்கு புறப்படும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அதில் தாமதம் ஏற்பட்டிருப்பதாக கொழும்பில் இருந்து நேற்று கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

கடற்படையினரால் தடுத்து நிறுத்தப்பட்ட "ருகுணு" கப்பலின் படையினரின் சோதனை முடிவடைந்ததும் அடுத்து அது நேற்று கொழும்பிலிருந்து புறப்பட்டு நாளை பருத்தித்துறைக்கு வந்துசேரும் என முன்னர் எதிர்பார்க்கப்பட்டது. (உ-33)

ஹெய்ட்டி மீது ராணுவத் தலையீடு

ஐ நா. பாதுகாப்புச் சபை அங்கீகாரம்

வாஷிங்டன், ஓக 1

ஹெய்ட்டியில் இராணுவத் தலையீட்டை மேற்கொள்ளுவதற்கு அனுமதியளிக்கும் தீர்மானத்தை ஐ.நா. பாதுகாப்புச் சபை நிறைவேற்றியுள்ளது.

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதி அறிஸ்டைட்டை அகற்றிவிட்டு அங்கு இராணுவம் சர்வாதிகார ஆட்சியை நடத்தி வருவது தெரிந்ததே.

ஐ.நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானத்தின்படி, பல நாடுகளின் படைகள் ஹெய்ட்டிக்கு அனுப்பிவைக்கப்படும். அமெரிக்காவின் தலைமையிலான இந்த இராணுவத் தலையீடு எப்போது இடம்பெறும் என்பது இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை என்று வாஷிங்டனில் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஹெய்ட்டியில் இராணுவ ஆட்சியாளர்களை பலநாடுகளின் படைகள் அகற்றிய பின்னர் 6 ஆயிரம் பேர் கொண்ட ஐ.நாவின் அமைதி

(4 ஆம் பக்கம் பார்க்க)

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

நல்ல இன அல்சேஷன் நாய்களும், அழகிய பொமனேரியன் நாய்களும் விற்பனைக்குண்டு. சபா விற்பனை நிலையம், அச்சுவேலி. [33193]

பேட்டு குஞ்சு விற்பனை

கறுப்பு பேட்டு குஞ்சுகள், பிறவுண் சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. மல்லிகாபதி, சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (32154)

மணிக்கூடு திருத்துதல்

சகல மணிக்கூடுகளும் உத்தரவாதத்துடன் குறைந்த செலவில் திருத்திக் கொடுக்கப்படும். உதிரிப்பாகங்களுக்காக மணிக்கூடுகள் வாங்கப்படும். சுஜன்ஸ் வாச்வேக்ஸ், 12, புகையிரத நிலைய வீதி, சுன்னாகம் சந்திக்கருகில் (7558)

தவறிவிட்டது

29-07-94 அன்று நல்லூருக்கும், வாலையம்மன் கோயிலுக்கும் இடையில் கழுத்துச் சங்கிலி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பின்வரும் விலாசத்துடன் தொடர்புகொள்ளவும்: இ. சண்முகநாதன், மே/பா யோகரத்தினம், சொனடி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [32183]

கனகசபை ஸ்ரீபாலகுமார் ஆகிய எனது 582921466V இலக்க அடையாள அட்டையும், கலை ஊடக இணைய அங்கத்துவ அட்டையும் 23-07-94 இல் ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் கோயில் தெற்கு வீதியிலுள்ள தேநீர்க்கடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து அதே கடையில் ஒப்படைக்கவும். [32194]

16-07-94 அன்று ஓமந்தையில் லொறியில் ஏறும்போது இரண்டு பேரின், பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், பாஸ்போர்ட் ஆகியவற்றுடன் கூடிய கைப்பை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து இவானந்தன் இராசாம்பாள், பனிப்புலம், பண்டத்தரிப்பு என்பவரிடம் ஒப்படைக்கவும். (32196)

காணவில்லை

ஒன்றரை அடி உயரமுள்ள பொமனேரியன் பட்டர் கலர் நாய் கடந்த வியாழக்கிழமை இரவு சாவகச்சேரி தபால் கந்தோர் வீதியில் காணாமல் போய்விட்டது. இதைக் கண்டவர்கள் சாவகச்சேரி நவீனசந்தை, விமலாஸ் கடையுடன் தொடர்புகொள்ளவும் சன்மானம் வழங்கப்படும். (சி-8812)

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்

இசைக்கலைமணி / நாட்டியக் கலைமணி (டிப்புளோமா) புதிய அனுமதிகள் 1993/1994

வட இலங்கை சங்கீத சபையின் நான்காம் தரப் பெறுபேறுகள் வெளிவரத்தாமதமான படியினால் மேற்படி அனுமதிகளுக்கான விண்ணப்ப முடிவு திகதி ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. முன்பு விண்ணப்பித்தவர்கள் விண்ணப்பிக்கத் தேவையில்லை. ஆனால் சித்தியடைந்த பெறுபேற்றுடன் பரீட்சைக் கிளையுடன் தொடர்பு கொள்ளவும். விண்ணப்பிக்காதவர்கள் 20/- செலுத்தி பரீட்சைக் கிளையில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று 31-08-1994 க்கு முன்னர் விண்ணப்பிக்கவும். இத்திகதிக்கு பிந்திய விண்ணப்பங்களும், தகுதி பெறாதவர்களின் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

— பதிவாளர்.

(சி 8814)

புலமைப் பரிசில் - 94

Bond கல்வி நிறுவனத்தால் 31-7-94, 02-8-94, 04-8-94, திகதிகளில் வெளியிடப்படும் ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரி பயிற்சி வினாத்தாள்கள் (கணிதம்-தமிழ்) விடைகளுடன் 10/- மட்டும் எல்லா பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும். (7559)

புலமைப் பரிசில் பரீட்சை

புலமைப் பரிசிலுக்கு சிறந்த நிறுவனத்தால் வெளியிடப்படும் புலமைப்பரிசில் வினாத்தாள் 02-08-94 செவ்வாய், 04-08-94 வியாழன் வெளியிடப்படும் தேவையானோர் முன்கூட்டியே தொடர்பு கொள்ளவும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (32182)

இந்த வாய்ப்பை பயன்படுத்துங்கள்
நீரிறைக்கும் இயந்திரம் திருத்தும்
பயிற்சி (இல. 02)

அறவழிப் போராட்டக் குழுவினால் நடத்தப்படவுள்ள

"நீரிறைக்கும் இயந்திரம் திருத்தும் பயிற்சி"யில் பங்கு கொள்ள விரும்புவோரிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

திறமையும், அனுபவமுள்ள-பிரபல போதனாசிரியரின் வழிகாட்டலில் பயிற்சி வாரத்தில் மூன்று தினங்களாக நான்கு மாதங்கள் நடைபெறும்.

பயிற்சி இடம்:
அறவழி பயிலகம், கைதடி - நுணாவில்

பயிற்சி ஆரம்பம்: 25 — 08 — 1994

பயிற்சி பெற விரும்புவோர் தமது விண்ணப்பங்களை 16-08-94 க்கு முன் பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்.

செயலாளர்,
அறவழிப் போராட்டக்குழு
த பெ. இல. - 2,
NVDAG சாவகச்சேரி.

[32166]

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
இலங்கை

பட்டப்பின் டிப்ளோமா பொது நிர்வாகம் இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை - 1993

மேற்படி பிற்போடப்பட்ட பரீட்சை பின்வரும் நேர அட்டவணைப்படி 15-08-1994 ஆம் திகதி தொடக்கம் 20-08-1994 ஆம் திகதிவரை நடைபெறும். பரீட்சை அனுமதி அட்டையினைப் பெறாதவர்கள் பரீட்சைக் கிளையில் 12-08-1994 க்கு முன்பாகப் பெற்றுக் கொள்ளும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

DATE	SUBJECT
15-08-94	Pg.Ad 103 Management of Public-Enterprises
16 08 94	Pg Ad 104 Administrative Theories
17-08-94	Pg Ad 106 Development Theories-and Strategies
18 08 94	Pg Ad 302 Communication in-Administration
19 08 94	Pg.Ad 303 Administrative Law
20-08-94	Pg Ad 502 Introduction to Computing

- பதிவாளர்,

[சி-8813]

31ஆவது நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்: 19 — 06 — 1923

மறைவு: 04 — 07 — 1994

செல்லையா சுப்பிரமணியம்

புன்னாலைக்கட்டுவனை பிறப்பிடமாகவும், புதுவளவு கோப்பாய் தெற்கை வதிவிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற செல்லையா சுப்பிரமணியம் அவர்களின் இறுதிக் கிரியைகளின் போது சகல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, நாளை (03-08-94) புதன்கிழமை அன்னாரின் கோப்பாய் இல்லத்தில் நடைபெறவுள்ள அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

— குடும்பத்தினர்.

புதுவளவு,
கோப்பாய் தெற்கு.

(32181)

வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலயம்

10 தினங்கள் நடைபெறும் அலங்கார உற்சவ காலத்தில்
தினமும் மாலை 6-45 முதல் 7-45 வரை

மகாபாரத சொற்பொழிவு

நடைபெறும்
நிகழ்த்துபவர்;
செல்வன் ப. தமிழ்மாறன்

— பரிபாலனசபை.

வாழ்த்துபவர்;
அம்பிகை அடியான்

[32202]

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சின்னத்தம்பி மகேந்திரநாதன்

(உரிமையாளர், ஜெனரல் மோட்டேர்ஸ்)

அன்னை மடியில்: 08 — 06 — 1935

ஆண்டவன் அடியில்: 13 — 08 — 1993

மனிதம் மரணித்து விட்டது ....
யதார்த்தமாய் வாழ்ந்து விட்ட
மரபுகளில் உறைந்து போன மனிதன் ....
பூவோடு பேசும் புன்சிரிப்பும்
அமைதியான அன்பும்......
பரிவோடு பரிமாறிய பண்பும்.........
நிதானமாய் செய்திட்ட செயலும்......
உழைப்பும் உறுதியும்......
இரும்புக்குள் ஒரு இதயம்......
ஒரு இதயத்தின் துடிப்பு......
ஓய்ந்து போனது ஓராண்டுகளுக்கு முன்......
ஆராதனைக்குரிய நினைவுகள் எம்முடன்......
துன்பத்தில் தோய்ந்து போன மனசுக்குள்
ஒரு மனிதம் மரணித்து விட்டது ...
வாழ்க்கையில் வாசம் வீசி விட்டதால்
அந்த நினைவுக் காற்றுக்களை
சுவாசிக்கிறோம்.........

பிரிவால் துயருறும்;
—குடும்பத்தினர்.

"வளர்மதி,"
பரமேஸ்வராசந்தி திருநெல்வேலி,

(32197)

4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அப்பா! பரமசிவம்

ஆண்டவன் படைப்பு! 13 — 06 — 1938

அரக்கர் பறிப்பு! 16 — 08 — 1990

அமரர்

கார்த்திகேசு திருஞானசம்பந்தர்

(நயினாதீவு)

(ஓய்வுபெற்ற நில அளவையாளரும், யா/தொழில்நுட்பக் கல்லூரி பகுதி நேர விரிவுரையாளரும்)

திதி: 02 — 08 — 1994

வான் குண்டு காலன் பறித்துயிர் நாலாண்டாகியும் நின்பிரிவு நினைந் தேங்கி நெஞ்சம் கலங்குதப்பா! தேற்றுவார் அற்றுத் தேம்பிடும் எமைத்தேற்ற - இறையருள் வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் பிரிவால் தவிக்கும்;
மனைவி, பிள்ளைகள்.

[illegible]

[32190]

இரண்டாம் மாத நினைவலைகள்

சுன்னாகம்

ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் பழைய மாணவரும், ஆசிரியரும், ஓய்வு பெற்ற அதிபரும் பல்கலைக்கழக பேரவை உறுப்பினருமாய் இருந்த

அமரர் பொன்னுத்துரை நாகரத்தினம்

B Sc (Hons) (Dip In Ed) சுன்னாகம் அவர்களை நினைவு கூருகிறோம்.

ஸ்கந்தாவுடன் பின்னிப்பிணைந்த தவப்புதல்வரே தளர்வு வந்த வேளை ஸ்கந்தாவை உய்வடையச் செய்ய பழைய மாணவர் சங்க போஷகர் பதவி ஏற்று புதுப் பொலிவடையச் செய்த செம்மலே உங்களின் எண்ணங்களும் ஆக்கங்களும் ஸ்கந்தாவிலே காணலாம், நீங்கள் போட்ட பாதையில் நாங்கள் நடக்கின்றோம்.

உங்களை எங்கள் நெஞ்சிருக்கும்வரை நினைவு கூருவோம்.

ஓம். சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஸ்கந்தா பழைய மாணவர் சங்கம்

கந்தரோடை,
சுன்னாகம்.

(சி/8817)

ஈரேழு வருடங்கள் தொடர்கின்ற நினைவுகள்..

நிஜமாய்: 14 — 11 — 1935

நிழலாய்: 02 — 08 — 198)

அமரர் சு. யோசவ் அன்ரன்

(பொலிஸ் சாஜன்)

எங்கள் அன்புத் தந்தையே
நீர் எமைப்பிரிந்து ஈரேழு
வருடங்கள் கடந்த இந்த நாளில்
இறைவன் நிழலில் இளைப்பாறி
எம்துயர் போக்க எமக்காக
இறைவனை மன்றாடும்;

உரிமையுடன்
அன்பு மனைவி, பிள்ளைகள்

141/1, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(32204)

---

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

திருமதி பொன்னம்மா வயிரமுத்து

மண்ணில் 14 - 05 - 1903

விண்ணில் 03 - 07 - 1994

திதி. 02 08 1994

இவர் காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் ஆழ்வார் வயிரமுத்து அவர்களின் ஆருயிர்த் துணைவியாரும், காலஞ்சென்ற திருமதி வள்ளிப்பிள்ளை முருகுப்பிள்ளை அவர்களின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் வி. க. முருகுப்பிள்ளை அவர்களின் பாசமிகு மாமியுமாவார்.

02 - 08 - 1994 செவ்வாய்க் கிழமை இன்று காலை நடைபெறும் அந்தியேட்டி வைபவத்திலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் பங்கு கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

எங்கள் அன்புத் தெய்வத்தின்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

பேரப்பிள்ளைகள்

வத்தனை,
புலோலி மேற்கு,
பருத்தித்துறை.

(32206)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

கல்வி வளர தேவைகள் இரண்டு

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் 175ஆவது ஆண்டு நிறைவுவிழா, மிகச் சிறப்பாக, பெருவிழாவாக நடந்தேறியது. கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினர் ஏற்பாடு செய்திருந்த இவ்விழா குறித்து அந்தக் கல்லூரிக் குடும்பம், கல்லூரிச் சமூகம் மட்டுமன்றி, முழு யாழ்ப்பாணச் சமூகமுமே மகிழ்ச்சி அடையும் என்பதில் ஐயமில்லை.

குடாநாட்டு மக்களின் அந்த மனமகிழ்ச்சியை விழாவில் கலந்துகொண்ட சகல மட்டங்களையும் சேர்ந்தவர்கள் பிரதிபலித்தார்கள் என்று சொல்லலாம். குடாநாட்டின் ஏனைய பாடசாலைகளைச் சேர்ந்த பழைய மாணவர்களும் பல்வேறு துறைகளிலும் இருந்து வந்து, இவ்விழாவில் தமது சொந்தக் கல்லூரியின் விழாவில் கலந்து கொண்ட பூரிப்புடன் காணப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தில் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்ட ஆங்கிலப் பாடசாலை இதுவேயாகும். இப்போது தன்மொழிப் போதனையே நடைபெறுகின்ற போதிலும், ஆங்கிலக் கல்வியினால் யாழ்ப்பாணச் சமூகம் அடைந்த கல்வி, சமூக வளர்ச்சியை ஒரு போதும் மறந்துவிட முடியாது.

யாழ்ப்பாண மக்கள் ஆங்கிலக் கல்வியூடாகவே வெளி உலகத்தை தெரிந்து கொண்டனர் அல்லது தொடர்பு கொண்டனர் என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது.

ஆங்கிலக் கல்வியூடாகப் பெறப்பட்ட கல்வி வளர்ச்சியின் வலுவே தமிழர்கள் மீது சிங்களவர்கள் பொறாமைப்பட வைத்தது. அந்தப் பொறாமையே சிங்களம் மட்டும்சட்டத்தினை ஆரம்பமாகக் கொண்டு தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறைக்கு வித்திட்டது. சிங்களவர்கள் தமிழர்கள் மீது ஏவிய அடக்குமுறையே தமிழர்களிடம் விடுதலை உணர்வை கிளர்ந்தெழச் செய்தது. அந்த உணர்வே இப்போது பெரும் விடுதலைப் போராட்டமாக மலர்ந்துள்ளது.

அந்த வகையில் இந்தப் போராட்ட காலத்திலும் ஆங்கிலக் கல்வியின் ஆரம்ப நிலையமாக இருந்த மத்திய கல்லூரி தமிழர்களின் நினைவுக்குரியதே.

மேலும் தமிழர்கள், தம்முடைய பெரும் நிதியமான கல்வியை போராட்ட காலத்திலும் இழந்துவிடக் கூடாது என்பதில் மிகக் கவனமாக உள்ளனர். இதனை ஞாயிறு நடந்த விழாவில் உரையாற்றிய தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு வே. இளங்குமரன் மிகத்தெளிவாக எடுத்துரைத்தார்.

எமது இயக்கம் கல்வி வளர்ச்சியை தமது கடமைகளில் ஒன்றாக எடுத்துள்ளது, அதற்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்கும் என்று — அவர் திட்டவட்டமாகத் தெரிவித்தார். இது மிகவும் ஆரோக்கியமான நிலையாகும். எனினும்—

தமிழர்களின் கல்வி மேலும் வளர்வதற்கு இப்போது இரண்டு முக்கிய தடைகள் உள்ளன என்று கருதலாம். ஒன்று இப்போதைய கல்வி முறை பரீட்சையை நோக்காக அல்லது மையமாகக் கொண்ட கல்வி முறை இது முற்றாகமாற்றி அமைக்கப்பட வேண்டும். மாணவர்களின் சுய சிந்தனைக்குஇடம் கொடாத, தொழில் திறனை வளர்க்காத — ஊக்குவிக்காத — வெறும் ஏட்டுக்கல்வி முறை உடனடியாக மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

அதே போன்று மாணவர் தாம் கல்வி பயில்கின்ற கல்விக் கூடத்தினூடு தமது அறிவைப் பெருக்கிக் கொள்ளலாம் என்ற நிறைவான நம்பிக்கை உடையவர்களாக மாற்றப்பட வேண்டும். அதற்கு ஏற்றால் போல கல்வி நிலையங்களும் — அங்கு பணிபுரியும் ஆசிரியர்களும்— பொறுப்பு உணர்ந்து செயற்பட வேண்டும்.

தமிழர்களின் கல்வி வளர்ச்சிக்கும் அதனூடான பொருண்மிய, சமூக முன்னேற்றத்துக்கும் இவை இன்றியமையாதவை. உடனடியாக கருத்திற் கொள்ளப்பட வேண்டியவை.

இரு கலாசாரங்களை சந்திக்க வைத்த வரலாற்று சிறப்பு மத்திய கல்லூரிக்கே!

175 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் பேச்சு

யாழ்ப்பாணம், ஓக. 2

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்குப் பல பெருமைகள் உண்டு; அது பல சாதனைகளையும் படைத்திருக்கிறது. இவை எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற் போல் அமைகிறது இந்தப் பிரதேசத்தின் வரலாற்றில் அது செய்திருக்கும் சிறப்புப் பதிவு. மேற்கு நாட்டுக் கலாசாரத்தையும் எங்கள் கலாசாரத்தையும் சந்திக்க வைத்த பெரும் மையமாக விளங்குவதே அந்தச் சிறப்பான வரலாற்றுப் பதிவாகும்,

இவ்வாறு நேற்று முன்தினம் மிகச் சிறப்பாக நடந்தேறிய யாழ் மத்திய கல்லூரியின் 175ஆவது ஆண்டு நிறைவு விழாவில் உரையாற்றிய —

யாழ் பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவர் கலாநிதி எஸ். கே. சிற்றம்பலம் இவ்வாறு தெரிவித்தார்.

கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவர் டாக்டர் எஸ். பி. ஆர். சீர்மாறன் தலைமையில் விழா நடைபெற்றது.

குடா நாட்டைச் சேர்ந்த அறிஞர்கள், கல்விமான்கள், துறைசார் நிபுணர்கள், தொழில் அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் உட்பட பெரும் எண்ணிக்கையானோர் விழாவில் கலந்து கொண்டனர். விழா நடைபெற்ற கல்லூரியின் ''தம்பர் மண்டபம்'' நிறைந்து காணப்பட்டது.

கலாநிதி சிற்றம்பலம் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது!

யாழ் மத்திய கல்லூரியில் வண. பீற்றர் பேர்சிவல் அடிகளாருக்கும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலருக்கும் இடையே உண்டான சந்திப்பும் நட்பும் கலாசாரங்களையும் சந்திக்க வைத்தது.

ஆறுமுகநாவலர் யாழ். மத்திய கல்லூரியின் மாணவர். எமது சமயமும், கலாசாரமும் மறுமலர்ச்சி பெறுவதற்கு வித்திட்டவர் நாவலர். ஆகையால் சைவசமயத்தின் வளர்ச்சிக்கும், எமது கலாசார வளர்ச்சிக்கும் இந்தக் கல்லூரி ஆற்றிய பணி ஈடு இணையற்றது.

யாழ். மத்திய கல்லூரியில் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்ட ஆங்கிலக் கல்வி இங்கு ஓர் கல்விப் பாரம்பரியத்தைத் தொடக்கி வைத்தது. அதோடு மேற்கு நாட்டுக் கலாசாரத்தையும் அறிமுகப்படுத்தியது.

ஆங்கிலக் கல்வி சுதேசக் கல்விக்கு வாய்ப்பாக அமைந்தது.

அதுமட்டுமன்றி ஆங்கிலக் கல்வியினூடு எமது சமய, கலாசாரங்களை மேற்கு உலகுக்கு அறிமுகப்படுத்துவதும் முடிந்தது. இந்தப் பணியைத் தொடக்கி வைத்தவர் ஆறுமுகநாவலர். அவரைத் தொடர்ந்து சேர். சி. வை. தாமோதரம்பிள்ளை, சுவாமி விபுலானந்தர், சேர். பொன் இராமநாதன் ஆகியோர் இப்பணியைத் தொடர்ந்தனர்.

இந்த ஐம்பெரும் பணிகளுக்கும் மத்திய கல்லூரியே மைய நிலையமாக நிகழ்ந்தது. இவ்வகைப் பெருமை இக்கல்லூரியின் வரலாற்றுச் சிறப்பு அணிகலமாகும் — என்று கூறினார்.

இளங்குமரன்

விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. வே. இளங்குமரன் கூறியதாவது:-

யாழ் மத்திய கல்லூரியின் வரலாற்றுச் சிறப்புகளையும், எமது பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்கு அது ஆற்றிய பங்குகளையும், சமூக முன்னேற்றத்துக்கு ஆற்றிய பணிகளையும் எல்லோரும் அறிவர்.

கல்வி, சமூக முன்னேற்றத்துக்கு ஆற்றிய தொண்டு போல அது எமது விடுதலைப் போராட்டத்திலும் முக்கிய வரலாற்றைப் பதித்திருக்கிறது. கல்லூரியின் சூழலில் எதிரிப்படை முகாம் இருந்தபோது — இராணுவம் யாழ் கோட்டையிலே அமைந்திருந்தபோது — போராட்டம் நடந்த காலங்களிலே இந்தக் கல்லூரி தாங்கி இருக்கின்ற விழுப்புண்கள் இன்னும் இருக்கின்றன.

புலிகள் கொடுத்த விலை

போர் வீரன் களத்திலே பட்ட விழுப்புண்கள் குறித்துப் பெருமைப்படுவான். அதே போல இக்கல்லூரியும் தான் பெற்ற விழுப்புண்கள் குறித்து பெருமை பெறும். கல்லூரி பெற்ற விழுப்புண்கள் போராட்டம் குறித்து மாணவர்களுக்கு நல்ல படிப்பினையைத் தருவனவாகவும் விளங்குகின்றன.

கோட்டையில் இருந்த இராணுவத்தை விரட்டி அடிக்க விடுதலைப் புலிகள் கொடுத்த விலையை எண்ணிப்பார்க்க வேண்டும் பல நூறு வீரர்களின் உயிர்த்தியாகத்தினால் தான், பல பாடசாலைகள் இடம் பெயர்ந்தும், பொலிவிழந்தும் இருக்கும் போது இப்பாடசாலை தலை நிமிர்ந்து நின்று பணிபுரிவதைப் பார்க்க முடிகிறது.

பாடசாலைச் [illegible] பெறுவதன் மூலமே மாணவன் ஒருவன் தன்னை வளர்த்துக் கொள்ள முடியும். அதற்கு அவன் பாடசாலைச் சுற்றாடலில் பற்றுவைக்க வேண்டும்; கல்லூரியில் பற்றுவைக்க வேண்டும் ஆசிரியர்கள், அதிபர் மீது பற்று வைக்க வேண்டும். பாடசாலைக் கல்வி மூலமே தமது அறிவைப் பெருக்கிக் கொள்ள முடியும் என்ற பூரண நம்பிக்கை உடையவர்களாக மாணவர்கள் விளங்க வேண்டும் — என்று கூறினார்.

சவால்களை எதிர்நோக்கி

கல்லூரி அதிபர் திரு. நாக. சண்முகநாதபிள்ளை பேசும் போது குறிப்பிட்டதாவது;

எமது கல்லூரி தனது 175 வருடகால வாழ்க்கையில் உயர்ந்தும் தாழ்ந்தும், கல்விப் பணியில் பல மேடு பள்ளங்களைக் கண்டுள்ளது. பல சோதனைகளை, சவால்களை எதிர்நோக்கியது. எனினும் தனது பணியில் தளர்ச்சியுறவில்லை. எமது வரலாறு நளமகாராசனின் வரலாறு போன்றது என்றும் ஒப்பிடலாம்.

எங்கள் கல்லூரியில் கிறிஸ்தவமும் சைவமும் இணைந்து செயற்பட்டு இன்று உயர்ந்த இடத்தைப் பெற்றுள்ளோம். இனியும் வளர்வோம். இக்கல்லூரியை தோற்றுவித்த பெருந்தகைகளின் தொண்டுள்ளமும் நல்லெண்ணமும் என்றும் இக்கல்லூரியின் ஆத்ம பலமாக நின்று வழி காட்டும் — என்றார்.

திருவாளர்கள் எஸ். இராமகிருஷ்ணன், கே. சோதிலிங்கம், எஸ். தனபாலன், எஸ். நடராசா, கலாநிதி என். எதிர்வீரசிங்கம், திருமதி பி. எஸ். விசுந்தரராசா ஆகியோரும் உரையாற்றினர்.

தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனின் ஆசிச் செய்தியை திரு. வே இளங்குமரன் வாசித்தளித்தார்.

யாழ். அரச அதிபர் கொழும்பில் இருந்து அனுப்பிய செய்தியை பேராசிரியர் வி நவரத்தினராசா வாசித்தளித்தார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்கினார். யாழ். ஆயர் அதி வண. தோமஸ் சௌந்தரநாயகம் தென்னிந்திய திருச்சபை ஆயர் வண கலாநிதி எஸ். ஜெபநேசன் ஆகியோரது ஆசியுரைகளும் அவர்களது பிரதிநிதிகளால் வாசிக்கப்பட்டன.

முன்னதாக யாழ். முனியப்பர் ஆலயம், மெதடிஸ்த தேவாலயம் ஆகியவற்றில் இடம்பெற்ற விசேட பூசைகள் ஆராதனைகளைத் தொடர்ந்து விழாப் பிரமுகர்கள் மங்கள வாத்திய முழக்க ஊர்வலமாக பாடசாலைக்கு அழைத்து வரப்பட்டனர்.

தேசியக் கொடியை தமிழீழ கல்விப் பொறுப்பாளர் திரு. இளங்குமரனும், கல்லூரிக் கொடியை அதிபர் சண்முகநாதபிள்ளையும், பழைய மாணவர் சங்கக் கொடியை டாக்டர் சீர்மாறனும் ஏற்றினர்கள்.

அதனைத் தொடர்ந்து கல்லூரிப் பெயர் வளைவுத் திரையை டாக்டர் சீர்மாறன், திரு எஸ் இராமகிருஷ்ணன் ஆகியோர் திரைநீக்கம் செய்து திறந்து வைக்க 175ஆவது ஆண்டு நிறைவு மண்டபத்திற்கான அடிக்கல்லை கலாநிதி எதிர்வீரசிங்கம் நட்டு வைத்தார்.

150 ஆவது ஆண்டு நிறைவு மண்டப வாயிலில் அமைக்கப்பட்ட சரஸ்வதி சிலையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் திரைநீக்கம் செய்து வைத்தார்.

பழைய மாணவர் சங்க அலுவலகத்தை பேராசிரியர் வி நவரத்தினராசா திறந்து வைத்தார்.

(ஆ-111)

துவேசத்தைத் தூண்டக் கூடிய பேச்சுக்களைத் தவிருங்கள்

தேர்தல் ஆணையாளர் வேண்டுகோள்

கொழும்பு, ஓக 2

தேர்தல் பிரசாரங்களை நடத்தும் போது மக்கள் மத்தியில் துவேசத்தை தூண்டக்கூடியதும் குரோதத்தை வளர்க்கக்கூடியதுமான பேச்சுக்களை தவிர்க்குமாறு தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி. சில்வா கேட்டுள்ளார்.

அரசியல் கட்சிகளினதும் சுயேச்சைக் குழுக்களினதும் பிரதிநிதிகளைச் சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு கேட்டுக் கொண்டார்.

பொதுத் தேர்தலில் போட்டியிடும் 1440 வேட்பாளர்களுக்கும் விசேட அடையாள அட்டைகளை வழங்க ஆட்பதிவுத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(க-3)

சந்திரிகாவைக் கொல்ல சதி செய்தாராம்

சந்தேக நபர் விளக்கமறியலில்

சந்திரிகா குமாரணதுங்காவைக் கொலை செய்ய சதி செய்த சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட உரசஹ சந்திரசேன என்பவரை இம் மாதம் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி பத்தேகம நீதிவான் உத்தரவிட்டார்.

சமனாலய என்றும் அழைக்கப்படும் இச் சந்தேக நபரிடமிருந்து சந்திரிகாவைக் கொலைச் சதி செய்த சம்பவம் தொடர்பான தகவல் எதனையும் பெறமுடியவில்லை என்று இரகசியப் பொலீஸார் நீதிவானிடம் தெரிவித்தனர்.

இதேவேளை — இக்கொலைச் சதி தொடர்பாக இன்னும் மூன்று நபர்களை பொலீஸார் தேடி வருகின்றனர்.

(க-எ)

'உதயதாரகை' சிறப்பு மலர்

யாழ்ப்பாணத்துக்கு வந்த அமெரிக்க மிஷனரிமார்களால் 1841 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ''உதயதாரகை'' பத்திரிகையின் 150 ஆவது ஆண்டைக் குறிக்கும் சிறப்பு மலர் ஒன்று தற்பொழுது அச்சிடப்பட்டு வருகிறது. இம்மலர் 1995 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 27 ஆம் திகதி பழம் பெரும் மிஷனரியான டாக்டர் டானியல் பூவர் பிறந்த தின விழாவன்று வெளியிடப்படும்.

(க-161)

ஐ. தே. க. ஆட்சிக்கு வந்தால் இரு நேரப்பாடசாலைகள்

தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 2

ஐக்கிய தேசியக் கட்சி பதவிக்கு வந்தால் பாடசாலைகள் இருநேரப் பாடசாலைகளாக்கப்படும்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டுள்ளது.

தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ள மற்றும் சில முக்கிய அம்சங்கள் வருமாறு:-

★ அமைச்சர்களின் எண்ணிக்கை 25 ஆகக் குறைக்கப்படும். ஒவ்வொரு அமைச்சுக்கும் ஒரு பிரதி அமைச்சரே நியமிக்கப்படுவார்.

★ ஊழல்களை விசாரிக்க நிரந்தர ஆணைக்குழு நியமிக்கப்படும்.

★ லேக்ஹவுஸ் பத்திரிகை மக்கள் மயப்படுத்தப்படும்.

★ இந்தியாவுடனான சிநேகபூர்வ உறவு நெருக்கமானதாக வளர்க்கப்படும்.

★ 18 — 30 வயதுக்குட்பட்ட இளைஞருக்கு தொழில் பயிற்சி வழங்கப்படும். இத்திட்டத்தி- சேரும் ஒவ்வொருவருக்கும் மாத அலவன்ஸாக ஆயிரத்து 200 ரூபா வழங்கப்படும்.

★ பாடசாலைகளில் குழந்தைகளைச் சேர்க்க அனுமதி பெறுவதில் விசேட விதிகள் கொண்டுவரப்படும்.

குடாநாட்டு தண்ணீர் உவராக மாறுவதன் காரணம் என்ன?

இரசாயனவியலாளர் விளக்கம்

அளவுக்கு அதிகமான நீரை வெளியேற்றுவதும் உரம் மற்றும் கிருமிநாசினி பாவிப்பதும் யாழ். குடாநாட்டு நிலத்தடி நீர் உவராக மாறுவதற்கான முக்கிய காரணங்களாக அமைகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய நீர் வழங்கல் சபையின் வடபிராந்திய நீர்ப் பகுப்பாய்வு கூட்டத்தின் இரசாயனவியலாளர் திருமதி சிவபாத சுந்தரம் இத்தகவலை தெரிவித்தார்.

இவ்வாறான நீரைப்பருகுவதனாலேயே புற்றுநோய்க்கு ஆளாகுபவர்களின் எண்ணிக்கையும், நீருடன் தொடர்புடைய நோய்களினால் பாதிக்கப்படுபவர்களுடைய எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

குடிதண்ணீரை ஒவ்வொருவரும் பரிசோதனை செய்து கொள்வது நல்லது தேநீர் மற்றும் ஐஸ்கிறீம் கடைகள் கட்டாயமாக தண்ணீரைப் பரிசோதனை செய்து கொள்ளுதல் வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

கல்சியம் அதிகமுள்ள நீரைப் பருகுவது இருதயநோயை ஏற்படுத்தாது என்றாலும், இதனால் சிறுநீரகத்துடன் தொடர்புடைய நோய் ஏற்படும் என்றும் அவர் கூறினார்.

(இ-எ 4)

மலத்தியோனைத் தருவிக்க சுகாதார பகுதி முயற்சி

வடபிராந்திய சுகாதார திணைக்களம் மலேரியா நோயைக் கட்டுப்படுத்துவதற்காக மலத்தியோனை தம்புத்தேகம களஞ்சியத்திலிருந்து தருவிக்க முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

அண்மையில் இத்திணைக்களத்திற்கு எடுத்துவரப்பட்ட 850 பெட்டி மலத்தியோனும் யாழ்ப்பாணம், வடமராட்சி, தென்மராட்சி ஆகியவற்றில் உள்ள மலேரியா காணப்படும் பகுதிகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனால் இப்பகுதிகளில் மலேரியாவின் தாக்கம் குறைந்து [illegible] வருகின்றது.

கடந்த ஜூன் மாதத்தில் யாழ். மாவட்டத்தில் இரண்டாயிரத்து 228 பேர் மலேரியாவால் பாதிக்கப்பட்டனர். இவர்களில் 156 பேர் மூளை மலேரியா நோய்வாய்ப்பட்டனர். கிளிநொச்சியில் 966 பேர் மலேரியாவால் பாதிக்கப்பட்டனர். [illegible] பேர் மூளை மலேரியா நோய்வாய்ப்பட்டமை குறிப்பிடத்தக்கது;

(க-4)

புலிகளின் குரல் வானொலியில்

02 – 08 – 1994
செவ்வாய் இரவு
★ 8-01 — ஊர்சுற்றும் ஒலிவாங்கி
★ 8-10 — அறிந்துகொள்ளுங்கள் தகவல் களஞ்சியம்
★ 8 20 — நலந்தானா நிகழ்ச்சியில், ''மதுபானத்தால் ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கும் நோய்களுக்கும்'' வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் ஆலோசனை வழங்குவார்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — கருத்துக்களம் ''உணர்வு''
8 50 — களமும் காவியமும் ''களமாடிய தளபதி''

03 – 08 – 1994
புதன் காலை
★ 7-03 — மாவீரர் வணக்கம்
★ 7-15 — நீங்கள் கேட்டவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

சிறுவனின் செயலால் வீடு தீக்கிரையானது

தென்மராட்சி, ஓக 2

பெற்றோர் வீட்டில் இல்லாத வேளையில் நான்கு வயதுச் சிறுவன் மண்ணெண்ணெய் விளக்கினை விட்டு ஓலை மறைப்பினுள் ஒளிந்து விளையாடிய சமயம் வீடு தீக்கிரையாகி முற்றாகச் சாம்பராகியது.

வீடு எரியத் தொடங்கியதும் சிறுவன் வெளியே ஓடிவிட்டதால் உயிர் தப்பியதாகத் தெரிவிக்கப்பட்டது. அண்மையில் சரவெட்டி துன்னாலையில் இச் சம்பவம் இடம்பெற்றது. (ஓ-117)

கசிப்பு உற்பத்தி குறைந்தது

யாழ்ப்பாணம், ஓக. 2

யாழ்ப்பாணம் தமிழீழ மாவட்ட நீதிமன்றின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கள்ளச்சாராய உற்பத்தி குறைந்துள்ளது.

மன்றில் ஆஜர் செய்யப்படும் கசிப்பு உற்பத்தியாளர்களுக்கு கடும் தண்டனை விதிக்கப்படுவதை அடுத்தே இந்த நிலை ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (க-4)

மாணவருக்கு ஆசி வழங்கும் வைபவம்

அச்சுவேலி, ஓக. 2

அச்சுவேலி மகா வித்தியாலயத்தில் கல்விகற்று க. பொ. த உயர்தர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு ''ஆசி வழங்கும் வைபவம்'' வித்தியாலய அதிபர் திரு. க. இராசதுரை தலைமையில் நடைபெற்றது.

மாணவர்கள் பரீட்சையில் சித்தியடைய ஆசிரியர்கள் ஆசி வழங்கியதுடன் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் உயர்தர வகுப்பில் கற்பித்த ஆசிரியர்களுக்கு குருவணக்கம் செய்து பரீட்சை அனுமதி அட்டைகளைப் பெற்றுக் கொண்டனர்.

(க-11)

பாப்பரசர் தபால் முத்திரை

கொழும்பு, ஓக. 2

திருத்தந்தை 2 ஆம் அருள் சின்னப்பர் பாப்பரசர் 1995 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் 21ஆம் திகதிகளில் மேற்கொள்ளும் இலங்கை விஜயத்தை ஒட்டி இலங்கை அரசு வண. யோசப்வாஸ் அடிகளாரதும் திருத்தந்தை 2 ஆம் அருள் சின்னப்பரதும் உருவப் படங்களைக் கொண்ட இரண்டு தபால் முத்திரைகளை வெளியிடத்திட்டமிட்டுள்ளது. (ஏ)

குளம் புனரமைப்பு

வட்டுக்கோட்டை, ஓக. 2

அராலி மேற்கு உப்பு வயல் குளம் ஆழமாக்கப்பட்டு அணைகள் அமைக்கப்பட்டு புனரமைக்கப்பட்டுள்ளது. (க-161)

சனிதோறும் கோழிகளுக்கு தடுப்பூசி

வட்டுக்கோட்டை, ஓக. 2

வட்டுக்கோட்டை கால்நடை வைத்தியசாலையில் ஒவ்வொரு சனிக்கிழமையும் கோழிகளுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகிறது. இப்பிரதேசத்தில் ஜனசக்தித் திட்டத்தின் கீழ் பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட விலங்குகளின் போசாக்கு, சுகாதாரம், நோய்த்தடுப்பு, இனப்பெருக்கம் ஆகியன பற்றியும் வைத்தியசாலை அறிவுரை வழங்கி வருகிறது.

(க-161)

பனை- தென்னை கூ. சங்கத்தின் 41 உறுப்பினர்களுக்கு பாதிப்பு மீளளிப்பு உதவி

யாழ்ப்பாணம், ஓக 2

வட மாகாண பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் சென்றவாரம் 9 அங்கத்துவ சங்கங்களின் 41 அங்கத்தவர்களுக்கு 48 ஆயிரத்து 450 ரூபா பாதிப்பு மீளளிப்பு நிதி வழங்கப்பட்டது.

பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களில் தொழில் புரியும் உறுப்பினர்களுக்காக மேற்படி சங்கங்களின் சமாசத்தினால் இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.

தொழில் பாதிப்பு, விபத்து மற்றும் நட்டங்களை ஈடு செய்ய காலத்திற்கு காலம் அங்கத்துவ சங்கங்களின் உறுப்பினர்களுக்கு பொதுத் திட்டம் ஒன்றின் கீழ் வட மாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் இப் பாதிப்பு மீளளிப்பு நிதி வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

(எ-4)

வெள்ளிவிழா

வட்டுக்கோட்டை, ஓக. 2

தென்னிந்திய திருச்சபையின் யாழ் பேராயத்தைச் சேர்ந்த வண. டி. சி. இரத்தினசிங்கம் அடிகளார் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட 25 ஆண்டுகள் பூர்த்தி வைபவம் அண்மையில் சங்கானையில் நடைபெற்றது.

(ஐ-16)

[illegible] நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் [illegible]

யா / அடைக்கல அன்னை

இளைஞர் மன்றத்தினரால் 31-7-94 இல்
நடத்தப்பட்ட
அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பின்

முடிவுகள்

1 ஆம் பரிசு — 561. 2 ஆம் பரிசு — 1572.
3 ஆம் பரிசு — 1796.

ஆறுதல் பரிசுகள்
(1) 1629 (2) 575 (3) 69 (4) 2214
(5) 2055

எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன் பங்குமனையில் பரிசில்களைப் பெற்றுக் கொள்ளவும்.

செயலாளர்

4 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
(இ/8821)

மரண அறிவித்தல்கள்

திருமதி சிவலிங்கம் ஞானாம்பிகை

யாழ்ப்பாணம் கோவில் வீதியில் வசித்த சிவலிங்கம் ஞானாம்பிகை அவர்கள் 29-07-94 அன்று மாத்தளையில் காலமானார். அன்னார் ஸ்கந்தபூர்வஜா, ஸ்கந்தமோகன், முருகதாஸ், பிரணவதேவி ஆகியோரின் தாயாரும், கணாநிதி, மனோகரி, சுபாசினி, கணேசலிங்கம் ஆகியோரின் மாமியாரும், நிசாயினி, முரளிதரன், கிரிதரன், சுபோதினி, சாயி, அசோக் ஆகியோரின் பேத்தியாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் மாத்தளையில் நடைபெற்றன என்பதை அறியத் தருகிறோம்.

தகவல்
ஸ்கந்தமோகன்
(மகன்)

127 / 15 கோவில் வீதி
யாழ்ப்பாணம்.
(32208)

சிவகுருநாதன் சண்முகசுந்தரம்

கோப்பாய் வடக்கு மலேயன் பென்ஷனர் காலஞ்சென்ற சிவகுருநாதன் அவர்களின் மனைவி சண்முகசுந்தரம் 1994 ஓகஸ்ட் 1 ஆம் திகதி தனது இல்லத்தில் காலமானார்.

அன்னார் நம்பியாரூரன், உமாதேவி, ஆகியோரின் தாயாரும், யோகேஸ்வரன் (இளைப்பாறிய லிகிதர் வவுனியா) அருள்பலர் ஆகியோரின் மாமியாரும், வேலாம்பரன் தாமோதரம்பிள்ளையின் சகோதரியும் மங்கையர்க்கரசி அருணாசலத்தின் (கொழும்பு) மைத்துனியும் அமரேசன், குகனேசன், கௌரி (இணைந்த பல்கலைக் கழகம் வவுனியா) தாரணி, பவானி, கணேசன், சேதிசன், சுமித்திரா, ஜயந்தி, ரவீந்திரன், ஆஷா, உஷா ஆகியோரின் பாட்டியாரும் ஆவார். அன்னாரின் இறுதிச்சடங்குகள் 1994 ஓகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி இன்று பி.ப 3 மணியளவில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
நம்பியாரூரன்
(மகன்)

கோப்பாய் வடக்கு
கோப்பாய்
(32209)

குருநாதர் சிவசுப்பிரமணியம் (பாலா)

(இளைப்பாறிய நீர்ப்பாசன திணைக்கள
தொழில் நுட்ப உத்தியோகத்தர்)

குருநாதர் சிவசுப்பிரமணியம் 1-8-94 இல் கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற குருநாதர் – தையல்நாயகி அவர்களின் அன்பு மகனும், நயினாதீவு காலஞ்சென்ற சுப்பிரமணியம் – விசாலாட்சி ஆகியோரின் மருமகனும், மங்களேஸ்வரி (மங்களம் - நயினாதீவு) அவர்களின் அன்புக் கணவரும், சிவகுமார் (ஜேர்மனி), சிவமதி, சிவநந்தினி (யாழ். பல்கலைக்கழகம் கலைப்பிரிவு— 1 ஆம் வருடம்), சிவச்செல்வி (யாழ். இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், து. சிவபாலன் (தபாலகம் யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மாமனாரும், கோபிசாந்தின் பேரனும், நடேசபிள்ளை (முன்னாள் அதிபர் - ஜேர்மனி), நாகேஸ்வரி, உமாபதி (பத்மநாதன் - நீர்ப்பாசன இலாகா கிளிநொச்சி), இலட்சுமணபிள்ளை (நீர்ப்பாசன இலாகா கிளிநொச்சி), பசுபதிப்பிள்ளை (கனடா), பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவபாக்கியலெட்சுமி, கதிர்காமநாதன், பத்மராணி, பரமேஸ்வரி, ஜெயலெட்சுமி, தர்மலிங்கம், மகேஸ்வரி, கனகாம்பிகை, திவாகரன் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
து. சிவபாலன்
(மருமகன்)

85 / 11 A V றோட்,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.
(32207)

திருமதி பசுபதிப்பிள்ளை புனிதவதி

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் தற்போது கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பசுபதிப்பிள்ளை புனிதவதி கொழும்பில் 1-8 1994 அன்று காலமானார்.

அன்னார் ஏரம்பு பசுபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நமசிவாயம் - பார்வதிப்பிள்ளையின் அன்பு மகளும் லலிதாதேவி, சர்வேஸ்வரி, சிவநேசன், லோகநாதன், பத்மநாதன், கலைவாணி, குகதாசன், சிவகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், பூபாலபிள்ளை, சண்முகரெட்ணம், சாமினா, யோகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற கைலாசபதி, மணிமகள், செல்வநிநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சஜமுகன், கலைவிழி, நர்மதா, நமசிவாயம், மயூரன், சண்முகப்பிரிய, சொரூபன், அபிராமி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
ஏ. பசுபதிப்பிள்ளை
(கணவன்)

சிவகுருவேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
(32210)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 02 - 08 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

இன்று

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கும் வைபவம் இன்று பிற்பகல் 3 மணிக்கு பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

கரவெட்டி பிரதேசசெயலர் திரு. செ. ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் கொள்கைத் திட்டமிடல் அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் திரு. செ. சுவாமிநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

யாழ். மாவட்டத்திற்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்டத்தின் கீழ் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுக்கு விளையாட்டு உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக ஒதுக்கப்பட்ட 50 ஆயிரம் ரூபாவுக்கு பெறப்பட்ட விளையாட்டு உபகரணங்களே கழகங்களுக்கு வழங்கப்படவுள்ளன. (ஐ)

ஆலயங்களில்

சண்டிலிப்பாய் சீரணி ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தான இலட்சார்ச்சனை நாளை புதன் கிழமை ஆரம்பமாகி 8ஆம் திகதி திங்கட் கிழமை பூர்த்தியாகும்.

★ ★ ★

சண்டிலிப்பாய் வடக்கு இரட்டையர்புலம் ஸ்ரீ ஞானவைரவர் கோவில் உற்சவ காலத்தில் மகாபாரதம் பற்றி தொடர் விரிவுரையாற்றிய திரு. அ. கமலாநந்தனை சண்டிலிப்பாய் சேக்கிழார் மன்றத்தினர் இன்று நடைபெறும் பூங்காவன உற்சவத்தில் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கவுள்ளனர்.

மண்எண்ணெய் விநியோகம்

தென்மராட்சிப் பகுதியில் மேட்டு நிலப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவோருக்கான ஐந்தாம் கட்ட மண்எண்ணெய் விநியோகம் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் தென்மராட்சிப் பிரிவினரால் கிராமசேவையாளர்களூடாக இன்று முதல் வழங்கப்படவுள்ளது. இம்முறை ஒவ்வொருவரும் 30 லீற்றர் மண்எண்ணெய் பெறவுள்ளனர்.

கடலில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாலை வரை வந்து சேராததால் அவர் இறந்ததாக கருதி மரண வீடு நடத்தப்பட்டது.

காணாமற் போன நபர் கடலில் பாய்ந்து நீந்திய போது, அலையினால் அடித்துச் செல்லப்பட்டு அன்று மாலை மரணமடையும் தறுவாயில் வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் கடற்கரையில் கரையொதுங்கினார். அப்பகுதி மக்கள் அவரைக் காப்பாற்றினர்.

இவர் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை தனது வீட்டிற்குத் திரும்பிய போது அங்கு மரண வீடு நடைபெற்றுக்கொண்டிருப்பதைக் கண்டு திகிலடைந்தார்.

இவரைக் கண்டதும் மரண வீடு மகிழ்ச்சி வீடாக மாறியது. தம்முடன் தொழிலுக்குச் சென்ற தமது மருமகன் இறந்ததாக நினைத்து வீடு வந்த கண்டர் மருமகன் உயிருடன் இருப்பது கண்டு மகிழ்ச்சி அடைந்தார். கண்டம் கடந்த கண்டர் 12 பிள்ளைகளின் தந்தையாவார்.

(அ-117)

ஐ. தே. கவின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஸணி ஆதரவாளர் ஸ்ரான்லி பெர்னாண்டோவின் கொலையில் சம்பந்தப்பட்ட நபர்களை வென்னப்புவ பொலீஸார் கைது செய்வதற்கு ஐ.தே.க. அமைச்சர் ஒருவர் முட்டுக்கட்டை போடுவதும் —

புத்தளம் மாவட்டத்தில் ஐ.தே.க. ஆதரவாளர்கள் நடத்திய கல்வீச்சுக்கு பௌத்த பிக்கு ஒருவர் மரணமான சம்பவமும் —

ஜனாதிபதி விஜேதுங்கா ஐ.தே.க. தலைவராக மட்டுமே செயல்பட்டு வருகின்றார் என்பதை தெளிவாக எடுத்துக் காட்டுவதாகவும் திருமதி பண்டாரநாயக்கா தமது கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளார். (உ-எ-6)

ஈழத் தமிழர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தினசபாபதி, யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் திருமதி கனகரட்ணம், யாழ். பல்கலைக் கழகத்தில் இருந்து வைத்திய கலாநிதி நச்சினார்க்கினியன், வைத்திய கலாநிதி என். சிவராஜா, வைத்திய கலாநிதி சோமசுந்தரம் மற்றும் வைத்திய கலாநிதி திருமதி எஸ். தெய்வேந்திரன் ஆகியோர் [illegible] கொள்ள இருப்பதாக அறியப்படுகிறது.

நல்லை முருகன் பாடல்கள் ஒலிப்பதிவு நாடா வெளியீடு

நல்லை முருகன் பாடல்கள் ஒலிப்பதிவு நாடா நாளை புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும். இந்த விழாவில் சிவாகம ஞானபாஸ்கரன் சிவஸ்ரீ கா. மகாதேவக்குருக்களும் வணபிதா பிரான்ஸிஸ் ஜோசவ் அடிகளும் மங்கல விளக்கேற்றுவார்கள். இசைக் கலைமணி செல்வி. இ. விஜயலட்சுமியின் கடவுள் வாழ்த்துடன் வரவேற்புரையை இன்னிசை வேந்தர் பொன். சுந்தரலிங்கம் நிகழ்த்துவார். நல்லை ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குவார்.

வாழ்த்துரையை கானகதாவாரிதி சிவ. வைத்தியானந்தசர்மா, செல்வி. புஸ்பா செல்வநாயகம், அருட்கவி. சி. விநாசித்தம்பி ஆகியோர் ஆற்றுவர். கலாநிதி சபா. ஜெயராசா வெளியீட்டுரை நிகழ்த்துவார். திரு. க. சோமசேகரத்தால் கலைஞர்களுக்கான கௌரவிப்பு நடைபெறும். அதனைத்தொடர்ந்து பாடல் ஒலிப்பதிவு நாடா வெளியீடு இடம்பெறும். நாதஸ்வரச் சக்கரவர்த்தி என். கே. பத்மநாதன் ஒலிநாடாவை வெளியிட திரு. நா. அப்புலிங்கம் முதற்பிரதியைப் பெற்றுக் கொள்வார். சிறப்புப்பிரதிகள் வழங்கலைத் தொடர்ந்து பாடல் ஒலிப்பதிவு நாடாவைப்பற்றிய மதிப்பீட்டுரைகளை கவிஞர் நா.க. சண்முகநாதபிள்ளை இயலிசைவாரிதி. ந. வீரமணி ஐயர், பேராசிரியர் கா. சிவத்தம்பி ஆகியோர் ஆற்றுவர்.

கவிஞர் புதுவை இரத்தினதுரை எழுதிய இந்தப்பாடல்களை கண்ணனின் இசையில் வர்ணராமேஸ்வரன் பாடியுள்ளார். இவ்விழாவில் சிறப்பு நிகழ்ச்சியாக நல்லை முருகன் பாடல்கள் இசையரங்கு இடம்பெறும். (க)

ஹெய்ட்டி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காக்கும்படை அந்த நாட்டின் பாதுகாப்பைப் பொறுப்பேற்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையில் —

ஹெய்ட்டியின் ஆட்சிப் பொறுப்பில் இருந்து வெளியேறும்படி அங்குள்ள இராணுவ ஆட்சியாளரை அமெரிக்கா கேட்டுள்ளது.

இதே வேளை —

ஐ. நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானத்தைத் தொடர்ந்து ஹெய்ட்டியின் இராணுவ ஆட்சியாளர் அவசரகாலச் சட்டத்தை பிறப்பித்து, நாட்டை தயார் நிலையில் வைக்கும் பிரகடனத்தை வெளியிட்டுள்ளனர்.

நீதிமன்றத்தில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலும்—

காலஞ்சென்றவருக்கு மரணத்தை ஏற்படுத்திய இரண்டாவது தாக்குதலின்போது அமைச்சர் அங்கு இருந்தார் என்பதற்கு சாட்சியங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை''— என்று நீதிவானுக்குச் சுட்டிக் காட்டினார்.

காலஞ்சென்றவரின் நலன்களைக் கவனிப்பதற்காக நியமிக்கப்பட்டிருந்த சட்டத்தரணிகள் ''காலஞ்சென்றவருக்கு மரணத்தை ஏற்படுத்திய இரண்டாவது தாக்குதலின்போதும் அமைச்சர் அதிகாரி அந்த இடத்தில் இருந்தார் என்பதை நிரூபிப்பதற்கு போதுமான சாட்சிகள் இருக்கின்றனர்''— என்று தெரிவித்தனர்.

அச்சாட்சிகளின் பெயர்களை வெளியிடும்படி நீதிவான் கேட்டதற்கு—

இக்கட்டத்தில் அச்சாட்சிகளின் பெயர்களை வெளியிட முடியாதென்றும் சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

இச்சந்தர்ப்பத்தில் தண்டனைச் சட்டக்கோவையின் 340 ஆம் பிரிவின் கீழ் அமைச்சர் அதிகாரியை 50 ஆயிரம் ரூபா பிணையில் விடுவிப்பதாக நீதிவான் உத்தரவிட்டார்.

எனினும்—

காலஞ்சென்றவருக்கு மரணத்தை ஏற்படுத்திய காயத்தை உண்டு பண்ணிய இரண்டாவது தாக்குதலின் போது அமைச்சர் அதிகாரி அங்கு இருந்தார் என்பதை உறுதிப்படுத்தும் சாட்சியங்கள் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில் அமைச்சரை விளக்கமறியலில் வைக்க நேரிடும் என்று நீதிவான் தெரிவித்தார்.

தேவைப்படும்போது அமைச்சர் அதிகாரி நீதிமன்றத்தில் ஆஜராவார் என்று அவரின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி தயா பெரேரா நீதிவானிடம் தெரிவித்தார்.

தமிழர்...

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

துறைகளும் சிங்கள மயமாக்கப்படும். இதுவே கட்சியின் முக்கிய கொள்கையாகும்.

இக்கொள்கையை நிறைவேற்றுவோம் என்று நாங்கள் சத்தியம் செய்து உறுதியளிக்கின்றோம்.

இன்று உலகில் எங்கும் ''பூமிபுத்திர'' வாதம் (மண்ணின் மைந்தர்கள்) தலைதூக்கியுள்ளது.

சோவியத் ஒன்றியம் வீழ்ச்சியடைந்த பின்னர் புதிதாகத் தோன்றியுள்ள ஒவ்வொரு நாட்டிலும் பூமிபுத்திரக் கொள்கை ஏற்கப்பட்டுள்ளது.

இந்துத் தமிழர், கிறிஸ்தவத் தமிழர், முஸ்லிம் தமிழர் ஆகிய தமிழ்பேசும் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாக்குரிமை, தற்போதைய வடக்கு - கிழக்கு யுத்தத்தில் சிங்களவர் வெற்றியீட்டும் வரை இடைநிறுத்தப்பட வேண்டும். இப்படி செய்யாவிடின் தமிழ் பேசும் மக்கள் சிங்களவர்களை வாக்குகளினாலும் ஆயுதங்களினாலும் தாக்குவர்.

கள்ளத் தோணிகள்

நேரு — கொத்தலாவல ஒப்பந்தத்தை நிராகரித்துவிட்டு, கள்ளத்தோணிகளுக்கும், தற்காலிக தென் இந்தியக் கூலிகளுக்கும் அவர்களின் தொழிற் சங்கங்களுக்கும் நீங்கள் அடிபணியப் போகின்றீர்களா?

சிங்களவர்கள் ஆங்கிலேயர்களுக்கு எதிராக வீரதீரத்துடன் போராடிப்பெற்ற மலையகப் பிரதேசத்தில் 'கள்ளத் தோணிகள் நாடு' ஒன்றைத் தோற்றுவிப்பதற்காக, இந்த ஆக்கிரமிப்பாளர்களின் கால்களில் விழுந்து வாக்குகளை கேட்டு இரந்து நிற்கும் கட்சிகளுக்கும் முன்னணிகளுக்கும் நீங்கள் வாக்கு அளித்து அடிமைகளாக வாழ விரும்புகின்றீர்களா?

திறந்த பொருளாதாரத்தில் உண்மையான பெயர் கறுப்புச் சந்தைப் பொருளாதாரமாகும்.

ஆசிரியர்களுக்கு விசேட சம்பளம் வழங்குவது எங்கள் கட்சியின் கொள்கையாகும்.

இந்த நாட்டில் நிலவுவது விதவைகளின் அரசியல் சாபமாகும்.

அரசியல்வாதி ஒருவர் மரணமானதும் அவரின் மனைவி, மனைவியின் பின்னர் அவரது பிள்ளைகள் பின்னர் அவர்களது உறவினர்கள் என்று அதிகாரத்துக்கு வரமுயலும் அரசியல் நிலைமைதான் இங்கு காணப்படுகிறது.

சிங்களவர் வெற்றியீட்ட

''சிங்கள பூமிபுத்ர'' கட்சி வெற்றியீட்டவேண்டும் அப்போதுதான் சிங்களவர்கள் வெற்றியீட்டியதாக இருக்கும்.

கட்சிகள் அனைத்தும் உண்மையில் சிங்களவர்கள் மீது பற்றுக் கொண்டவையாயின், இலங்கையர் என்ற சொல்லைப் பயன்படுத்தாது, சிங்களவர் என்ற சொல்லை பயன்படுத்த முன்வருமாறு என்று சவால் விடுகின்றோம்.

எனவே நாட்டைக் காப்பாற்ற ''பூமிபுத்ர'' கட்சிக்கு வாக்களியுங்கள் — இவ்வாறு தேர்தல் உரையில் தெரிவிக்கப்பட்டது. (அ-எ-6)

புதிய விமாகி

மட்பாண்டக் கூட்டுத்தாபன
பொருள்களும் மின்சார உபகரணங்களும்
விற்பனை செய்பவர்கள்
27/3, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

நாடுங்கள்!
விரையுங்கள்!!

உங்கள் வெதுப்பகங்களின் போறணைகள் கட்ட உகந்த சீமெந்து (German fire clay) எம்மிடம் நியாய [illegible].

(சி 8654)

தமிழீழத்தினைத் தெரிந்து கொள்ளுங்கள்

வினா - விடைப் போட்டி

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் உட்கட்டுமானப் பகுதியால் எதிர்வரும் நல்லூர் திருவிழாவின் போது மாணவர்களுக்கு இடையே இப்போட்டி நடத்தப்படும்.

போட்டிமுறை

- பல சுற்றுக்களாக நடத்தப்படும் போட்டியில் தெரிவு செய்யப்படுவர்களுக்கு இடையே இறுதிச் சுற்றுப் போட்டி நடத்தப்படும்.
- இறுதிச் சுற்றுப் போட்டியில் முதலிடம் பெறுபவருக்கு முழுநிறைவான தங்கப்பதக்கம் வழங்கப்படும்.
- ஏனைய சுற்றுக்களில் வெற்றி பெறுபவர்களுக்கும் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.
- தமிழீழத்தின் பௌதீகச் சூழல், பௌதீகவளம், குடித்தொகை, பொருளாதார அமைப்பு, வளர்ச்சி, வரலாறு, அரசியல் ஆகியன பற்றிய பொது அறிவினை மாணவர்களிடையே வளர்க்கும் வகையில் இப்போட்டிக்கான வினாக்கள் அமையும்.

போட்டிக்கான விதிகள்

- 18 வயதுக்கு உட்பட்ட மாணவர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- தமது விண்ணப்பங்களை தமது கல்லூரி அதிபர்கள் அல்லது தமது பகுதி கிராம சேவை அலுவலர்களைக் கொண்டு உறுதிப்படுத்தி அனுப்பி வைக்க வேண்டும்.
- விண்ணப்ப முடிவுதிகதி: 15 – 08 – 1994
- விண்ணப்பங்களை

'தமிழீழத்தினை தெரிந்து கொள்ளுங்கள்'
உட்கட்டுமானப்பகுதி
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
இல. 10, சம்பியன் வீதி
கொக்குவில்

என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

- இதற்கான விண்ணப்பப்படிவங்களை சகல புத்தகசாலைகள் உட்கட்டுமானப்பகுதி ஆகிய இடங்களில் 5/- ரூபா செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

உட்கட்டுமானப்பகுதி,
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு
நிறுவனம்.

[இ-8815]

புலோலி பல நோக்குக் கூட்டுறவு சங்கம்

(வ = து)
புலோலி கிழக்கு, பருத்தித்துறை

பதவி வெற்றிடம்

பொது முகாமையாளர் பதவி

165 / 88 - 101 / 9

மேற்குறிப்பிட்ட பதவிக்கு யாழ். மாவட்டத்தில் வசிக்கும் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பபடிவத்தினையும் மேலதிக விபரங்களையும் சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தகைமைகள்:

அ) கூட்டுறவுப் பணியாளர் 10 ஆவது சம்பளத்திட்டத்தில் (முகாமை மேற்பார்வை மட்டத்திலான பதவியில் 8 வருடத்திற்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 11 ஆவது சம்பளத்திட்டத்திலான பதவியில் மேற்குறித்த வண்ணம் 6 வருட அனுபவம்.

அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றின் பட்டத்துடன் அல்லது அதற்கு இணையான பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / தொழில் நுட்ப ஸ்தாபனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 2 வருடத்திற்கு குறையாத அனுபவம்.

அல்லது

இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் (உயர்தரம்) / க. பொ. த. (உயர்தரம்) இல் 3 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / தொழில் நுட்ப ஸ்தாபனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 4 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

சம்பளத்திட்டம்:

1405 — 2470
60 X 4 — 75 X 11

இத்துடன் அங்கீகரிக்கப்பட்ட சகல படிகளும் வழங்கப்படும்.

வயது:

25 — 50 வரை. கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது.

பிணை

கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுப் பிரமாணத்திற்கமையவும், நெறியாளர் சபைத் தீர்மானத்திற்கமையவும் செலுத்தப்படல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 15-8-94 ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ எமக்குக் கிடைக்கக்கூடியவாறு தலைவர், புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், புலோலி கிழக்கு, பருத்தித்துறை என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

தலைவர்,
புலோலி ப. நோ. கூ. சங்கம்,
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

28 - 07 - 1994. (இ-8820)